O.S. 102/2019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:04.06.2024

DW1:செந்தில்குமார் த/பெ– நாராயணசுவாமி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் இந்திய ஆயில் கார்பரேஷனில் 30 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் நான் ஜீலை 20.07.2020 முதல் பணியாற்றி வருகிறேன். நான் சில்லரை விற்பனை மேலாளராக 20.07.2020 முதல் பணிபுரிந்து வருகிறேன். 20.07.2020ம் தேதியிட்ட எனது பணி நியமன உத்தரவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.102/2019 வழக்கு தாக்கல் செய்த காலத்தில் 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் சில்லரை விற்பனை மேலாளராக 4 நபர்கள் இருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 எங்களது நிறுவன இடத்தின் முந்தைய உரிமையாளருக்கும், எங்கள் நிறுவனத்திற்கும் இடையே ஏற்பட்ட வாடகை ஒப்பந்தம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் பிரதிவாதிகள் சார்பாக யார் ஒப்பந்தத்தில் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் அப்பொழுது விற்பனை மேலாளராக உள்ள அதிகாரி கையெழுத்து செய்திருப்பார், ஆவணத்தை பார்த்தால் தான் அந்த அதிகாரியின் பெயர் எனக்கு தெரியும். (சாட்சியிடம் ஆவணத்தை காட்டி கேட்டதில், அதை பார்த்துவிட்டு) அப்போதைய சில்லரை விற்பனை மேலாளர் ஆர்.கலைச்செல்வன் என்பவர் பிரதிவாதிகள் சார்பாக ஒப்பந்தத்தில் கையெழுத்து செய்துள்ளார். வா.சா.ஆ.1 ஆவணம் மதுரையில் உள்ள பிரதிவாதிகள் அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஐ தயாரித்தது பிரதிவாதிகள் ஸ்தாபனத்தின் Legal Advisor என்றால் சரிதான். அந்த சட்ட ஆலோசகர்

கே.முரளிதரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை 2020 க்கு பின்னர் முதன்முதலில் நான் எப்போது பார்த்தேன் என்றால் நான் மதுரை அலுவலகத்தில் பதவியேற்ற 2 மாதங்களுக்கு பிறகு வாடகை செலுத்தும் சமயத்தில் பார்த்தேன். வா.சா.ஆ.1 ல் கையெழுத்து செய்த கலைச்செல்வன் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் எந்த ஊரில் பணி செய்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 வாடகை ஒப்பந்தத்தில் எந்த இடத்திலும் YESPEEKAY என்ற நிறுவனத்தின் பெயரோ அல்லது பெயரோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் காட்டப்பட்ட சொத்து நிர்மலா, ராஜி மற்றும் திருமகள் ஆகிய மூவருக்கும் பாத்தியமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 நபருக்கும் முற்பட்ட காலத்தில் அந்த இடத்தின் உரிமையாளராக யார் இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அ.வ.எண்.102/2019 ல் பிரதிவாதிகள் நிறுவனத்தின் சார்பாக எதிர்வழக்குரையை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அப்போதிருந்த அதிகாரி தாக்கல் செய்திருப்பார், அவர் பெயர் எனக்கு தெரியாது. எதிர்வழக்குரையில் A.ராஜாராம், Chief Divisional Manager என்பவர் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த எதிர்வழக்குரை 08.01.2021 ல் தாக்கல் செய்துள்ளதாக நீதிமன்ற முத்திரை உள்ளது என்றால் சரிதான்(சாட்சியிடம் எதிர்வழக்குரையை காட்டி கேட்டதில் சாட்சி அதை பார்த்து சொன்னார்). எதிர்வழக்குரையில் பாரா 7-ல் கடைசி வரியில் 24.12.1963 ல் இருந்து வழக்கிடை சொத்தில் பெட்ரோல், டீசல் சில்லரை விற்பனை நடந்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 24.12.1963 ல் இருந்து யார், யாருக்கு வழக்கிடை சொத்தில் டீலர்ஷிப் கொடுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் எங்கள் அலுவலகத்தில் இருக்கும். அதை நான் பார்த்துள்ளேன். ஆனால் அவர்கள் பெயர் தற்போது ஞாபகமில்லை. வா.சா.ஆ.1 ல் உள்ள சரத்துக்களை நான்

மதுரை அலுவலகத்தில் பதவியேற்ற 2 மாதங்களுக்கு பிறகு பார்த்தேன். வா.சா.ஆ.1 ல் ஒவ்வொரு மாதமும் செலுத்த வேண்டிய வாடகையை மூன்று சமபாகமாக பிரித்து 3 உரிமையாளருக்கும் தனித்தனியாக, கொடுக்க வேண்டும் என்ற சரத்து உள்ளது என்றால் சரிதான். மாத வாடகையை ரொக்கமாகவோ, காசோலையாகவோ, வரைவோலை மற்றும் வேறு விதத்தில் கொடுப்பதா என்பது சம்மந்தமாக வா.சா.ஆ.1 ல் சரத்து எதுவுமில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் 3 மாதத்திற்கு மேல் வாடகை பாக்கி இருந்தால் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்க உரிமையுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் கண்டுள்ள சரத்துகளுக்கும், நிபந்தனைகளுக்கும் மாறுபாடாக இந்தியன் ஆயில் நிறுவனம் செயல்பட்டால் இந்த இடத்தின் உரிமையாளர் நுழைவதற்கு அதிகாரம் உண்டு என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பக்கம் 7 ல் மேலிருந்து 18 வது வரியில் இருந்து 24 வது வரி உள்ள பகுதியில் வா.சா.ஆ 1 ல் உள்ள சரத்துகளுக்கும், நிபந்தனைகளுக்கும் மாறுபாட்டு செயல்பட்டால், சொத்தின் உரிமையாளர்கள், வாடகைதாரராக இருக்கும் பகுதிக்குள் நுழைவதற்கும், சுவாதீனம் எடுப்பதற்கும், அனுபோகம் செய்வதற்கும் உரிமையுள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 ஆவணத்தை பார்த்து தான் சொல்கிறீரா என்றால் பார்த்துவிட்டு தான் சொல்கிறேன்.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.